விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 15 ரபிஉல் 28 இதழ் 293

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1.12.1986

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
1-12-1986
PERIODICALS DIVISION
LIBRARY

## புளியங்குளத்தில்
## பொதுமக்கள்மீது ராணுவம் சூட்டதில் இருவர் பலி; ஆறு பேர் காயம்

[வவனியா நிருபர்]

புளியங்குளத்தில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது நடாத்திய தாக்குதலில் இருவர் பலியானார்கள். இச் சூட்டுச் சம்பவத்தில் ஆறு பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

ஓமந்தை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு புறப்பட்ட இராணுவத்தினர் ஹெலிகொப்டர்மூலம் பனிச்ச நீராவி என்ற இடத்திற்கு வந்து தரையிறங்கிப் பதுங்கியிருந்தனர். பின்பு நேற்றுக் காலை தனியார் லெறிகளிலும், வாகனங்களிலும் சென்று புளியங்குளம் சந்தியை அடைந்தனர் அங்கு கூடிநின்ற பொது மக்கள் மீது அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் பொதுமக்களில் இருவர் இறந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. ஆயினும் அவர்

(8ம் பக்கம் பார்க்க)

### ● இலங்கையரசின் புதிய பிரேரணை தொடர்பாக

# சிதம்பரம் குழு போராளிகளை நாளை சென்னையில் சந்திக்கும்

(புதுடில்லி)

தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண்பது தொடர்பாக இலங்கை அரசினால் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் குறித்துத் தமிழ்ப் போராளிகளின் கருத்தை அறியுமுகமாக மத்திய இணையமைச்சர்கள் ப. சிதம்பரமும், கே. நட்வர்சிங்கும் நாளை சென்னை செல்கின்றனர்.

இதனையடுத்து இலங்கையரசுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடருமுகமாக இவ்விரு இணையமைச்சர்களும் கொழும்பு செல்லவுள்ளனர்.

கடந்தவாரம் இணையமைச்சர் சிதம்பரம் தலைமையிலான [illegible] கொழும்பு வந்து ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே இதனையடுத்து இலங்கை அரசினால் புதிய பிரேரணைகள் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. பேர்னாட் திலகரட்ன மூலம் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது இப்பிரேரணைகள் சம்பந்தமாகவே இலங்கைத் தமிழ்ப் போராளிகளை இந்திய இணையமைச்சர்கள் நாளை சென்னையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளைத் தொடர்ந்தே [illegible] இலங்கை அரசுடனான பேச்சுக்களில் பங்கு கொள்ளும் வகையில் கொழும்பு வருவது பற்றிய திட்டமும் திகதியும் நிர்ணயிக்கப்படும்.

நாளைய இச்சந்திப்பின்போது தனிநாட்டுக் கோரிக்கை உதிதேச மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு ஆகியவை

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் புதிய பிரேரணைக்கான இந்தியாவின் பூர்வாங்கபதில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுகுறித்து இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணைகளுக்கான இந்தியாவின் பூர்வாங்க [illegible] இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் சமர்ப்பித்துள்ளார்.

திரு டிக்ஸிற் ஜனாதிபதியை நேற்று சந்தித்து சுமார் 30 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கையரசின் பிரேரணைகளுக்குரிய விரிவான பூரண பதில்ஒன்று ஒருவாரகாலத்தில் இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

டிக்ஸிற்றுடனான சந்திப்பின்

(8-ம் பக்கம் பார்க்க)

### மட்டுநகரில் நேற்றைய சம்பவங்கள்

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு செங்கலடியிருப்புப் பகுதியில் நேற்று படையினர் சுற்றிவளைத்து பெண்ணொருவர் உட்பட அநேகமா

(8ம் பக்கம் பார்க்க)

## வேலைக்காரச்சிறுமி மரணம் கொலையெனத் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள வீடு ஒன்றில் பணியாற்றிய வேலைக்காரச் சிறுமியின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அராலி வடக்கைச் சேர்ந்த 12 வயது சிறுமி யாழ்ப்பாணத்திலுள்ள வீடொன்றில் வேலைக்கிருந்த சமயம் மரணமானதையடுத்து அப்பகுதி கிராம சேவையாளர் பொலிசார் மூலம் நீதிமன்றத்தின் கவனத்துக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து நீதவான் மரண விசாரணையை நடத்தினார்.

சிறுமியின் உள்ளுறுப்பின் சில பகுதிகளை ரசாயன பரிசோதனைக்கு அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அப் பரிசோதனை அறிக்கை கடந்த வாரம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

### மூதூர் பகுதியில்
## புலிகள் தாக்குதல் 4 ராணுவம் பலி; ஜீப் சேதம்

யாழ்ப்பாணம், திங்கள்

தெகிவத்தை இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் ஜீப் வண்டியிலும், கால்நடையாகவும் புறப்பட்டுச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தரைக்கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதில் 4 படையினர் கொல்லப்பட்டனர் இதனையடுத்து விடுதலைப் புலிகள் போராளிகளுடன் ஏற்பட்ட நேரடி மோதலின் இறுதியில் படையினர் பின்வாங்கினர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் தெகிவத்தை ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட 40 ராணுவத்தினர் ஒரு ஜீப் வண்டி சகிதம் நடந்து அலி ஒளுவ

(8ம் பக்கம் பார்க்க)

இதோ வெளிவந்து விட்டது!

சிவம் இன்டஸ்றீசாரின்

1987-ம் வருடத்திற்குரிய கலண்டர்கள்

கண்ணைக் கவரும் வர்ண ஓவியங்களில்

★ சுவாமிப்படங்கள் ★ சினிமாப்படங்கள்

இயற்கைக் காட்சிகள் ★ மிருகங்கள் ★ பறவைகள்

இவற்றைத் தாங்கி பெரிய கலண்டர்கள், மீடியம் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள் மற்றும் ரேகை கலண்டர்கள் என்பனவும் உண்டு வியாபார ஸ்தாபனங்களானாலும் சரி கல்வி நிறுவனங்களானாலும் சரி மற்றும் எத்தகைய தொழிற்பேட்டைகளானாலும் சரி உங்கள் ஸ்தாபனங்களுக்கு விளம்பரம் இன்றியமையாதது. மக்கள் சக்தியை உங்கள் பக்கம் இழுப்பதற்கு எமது கலண்டர்களின் மூலமாக உங்கள் குறிக்கோள்களை அடைந்து வெற்றியீட்டுங்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

சிவம் இன்டஸ்றீஸ்,
மாவிட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பளை.

## இப்படியும் சுற்றுநிருபம்!

யாழ்ப்பாணம், திங்கள்

"இராணுவத்தினர் வைத்தியசாலைக்கு வந்தால் நல்ல முறையில் அவர்களை உபசரித்து அவர்கள் தேவைகளை உடன்பூர்த்தி செய்து அனுப்பி வைக்க வேண்டும்"

சுகாதாரத்திணைக்களத்தால் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

(வா)

## எய்ட்ஸுக்கு 20 பேர் பலி

பொன், நவ 30

மேற்கு ஜேர்மனில் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்ட இருபது பேர் 'எய்ட்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளார்கள். [ஒ]

### ஆனையிறவு தடைமுகாமில்
## அடையாள அட்டைகேட்டு பஸ் பிரயாணிமீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், திங்கள்

பஸ்ஸில்வந்த பிரயாணி ஒருவர் அடையாள அட்டை வைத்திராத காரணத்தினால் [illegible] படையினரால் பலமாகத் தாக்கப்பட்டதால் நேற்று முன்தினமிரவு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பிரேமராஜா (17வயது) என்பவரே படையினரால் தாக்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆனையிறவு தடைமுகாமில் இச்சம்பவம் நடந்துள்ளது.

வ. போ. ச. பஸ்ஸில் வவனியாவிலிருந்து சாவகச்சேரிக்குத் தான் வந்த சமயம் ஆனை

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

6 மாத நல்ல இன அல்சேசியன் பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 18. கொண்டலடி லேன், நல்லூர். [C 6090]

கண்டி வீதி, பளையில், தம்பகாமம் ரோட்டில் 150 யாரில் 30 பரப்புத் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு யூரா றேடிங் செண்டர், கண்டி வீதி, பளை. [C 6094]

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. அத்துடன் தென் ஓலை பாம் கன்றுகளும் Cana [Palm] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: "இரத்தின வாசா," கருவேலடி லேன், [பழைய புகையிரத வீதி] கொக்குவில் கிழக்கு. [C 6102]

நல்ல இன நன்னீர் மீன்கள் பல வகைகளும், மன் தொட்டிகளுக்கு வேண்டிய உபகரணங்களும் விற்பனைக்குண்டு. ஓடருக்கு மீன் தொட்டிகள் குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும். இ. பரஞ்சோதி, இணுவில் ரோட், "வசந்தம்", மானிப்பாய். [C 6093]

நேரத்தை மிகுதிப் படுத்த கையால் இடித்து வறுத்த "அரிசிமா" எங்களிடம் கிடைக்கும். 500 கிறும் பெக்கட் ரூபா 9-50 வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு M G M. 777, K K S Road, 208 1st Cross St, Jaffna T.P 22611 [C 5065]

நல்ல நிலையிலுள்ள E N. தொடர் இலக்க A 30 கார் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட ஞாயிற்றுக்கிழமை மட்டும். 22/4, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொடர்பு:- றிக்கோ, 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-6055)

உடுவில்—மானிப்பாய் பிரதான வீதியில் 6½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. இது மருதனமடச் சந்திக்கும் மானிப்பாய் சந்திக்கு மிடையில் ஒருமைல் தூரத்திலுள்ளது விரும்புவோர், C S. கதிர்காமநாதன், 639/2, நாவலர் வீதி, நல்லூரில் தொடர்புகொள்ளவும் (C-6072)

வீட்டுத் தளபாடங்கள், Burma teak அல்மாரி, Show case, Ceiling Fans, கடை Show case, Vono spring கட்டில்கள், வயலின், Wall Clock, குளிர்சாதனப் பெட்டி, Usha தையல் மெஷின், ஹோல் செற் Electric Organ, தேக்கு சாப்பாட்டு மேசை கதிரைகள், பெட்சீற், Curtain, கம்பளி மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-6027)

தேக்கு, Steel அலுமாரிகள், Asia சைக்கிள், கசற் றேடியோக்கள் தையல் மெஷின், Dressing Table, சாப்பாட்டு மேசைகள், Show Case Vono Spring கட்டில்கள், Kenwood Electric oven, 4 Burner Gas குக்கர், Gas சிலிண்டர்கள், கிளாஸ் வகைகள், சில்வர் பித்தளைப் பொருட்கள், கம்பளிகள், வெளிநாட்டு Curtains ஹோல்செற், T V. Stand, மற்றும் பல உடன் விற்பனைக்கு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C 6010]

## விற்பனைக்கு

(New Typewriters) தட்டச்சு இயந்திரங்கள் Portables-Optima, Olympia Silverreed மற்றும் ஆங்கிலம்- தமிழ் Standards உடன் விற்பனைக்கு. Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 6084)

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் ஆண்டு 7—11 வகுப்புகளிற்கு தமிழ், சமூகக்கல்வி, வர்த்தகம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை மாலை நேரம் போதிப்பதற்குத் திறமை மிக்க ஆசிரியர்கள் தேவை. வயது, தகுதி, அனுபவம்போன்ற சகல சுயவிபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: C6087 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 6087]

## சேவை

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் பிலிம்கள், அல்பங்கள் விற்பனை செய்வதுடன் பிறேம்கள் செய்தலுக்கும் ஸ்ருடியோ நித்தியசித்திரா, சங்கானை [C 6019]

எப் பொருள்களானாலும் புதியனவைகளானாலும், பழையனவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் பழையனவுமாகிய நானாவித பொருட்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி டெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை (சந்திக் கருகாமையில்) [C 6088]

## வகுப்புக்கள்

A/L Day Class சிக்கல் எண் ஆரம்பம்: 01 12-1986, Mon. 9-30 ஆசிரியர்: பிரேம்நாத் 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (P M. C முன்பாக) (C-6060)

க. பொ. த (உயர்) 1987 விஞ்ஞான பிரிவிற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. விலங்கியல் திரு நந்தநாதன் தாவரவியல் திரு குணசீலன், இரசயனம் திரு ரஞ்சன், பௌதிகம் திரு விக்கி, கணிதம் திரு ஆறுமுகம். Modern Education Centre, Karaveddy. C-5926

## மணப்பந்தல்

யாழ் இந்து உயர் வேளாள 31 வயது நிரம்பிய கொழும்பு தனியார் கொம்பியூட்டர் பிரிவுரையாளர் மாதாந்தம் 4,000/- சம்பளம் [illegible] 5' 6" உயரம் கொண்ட மணமகனுக்கு தகுதியான அழகான 'மணப்பெண்' தேவை. கொழும்பில் வீடு இருந்தால் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்: 'மணமங்கல அரங்கம். 139, பீச் றோட், யாழ்ப்பாணம். [C 6079]

## கல்வி

(தரம் 9) 10ம் ஆண்டில் கல்விகற்க விரும்பும் மாணவர் களில் அதிகூடிய புள்ளிகளை எடுக்கக்கூடிய முதல் 3 மாணவர்களுக்கு 1987ம் ஆண்டு இலவசக்கல்வியை போதிக்க முன்வந்துள்ளோம். பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 5-12-86. (7/12 9-30—11-30 விஞ்ஞானம், (8/12) 9 30—11 30 கணிதம், (9/12) 9-30—11-30 தமிழ் மேற்குறிப்பிட்ட திகதிகளில் போட்டிப் பரீட்சை நடைபெறும், Science Centre Karaveddy. (C-5925)

## தவறிவிட்டது

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த ஐயாத்துரை தேவானந்தன் இலக்கம்: 572440648V தேசிய அடையாள அட்டை மானிப்பாய்க்கும் குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். (C 6101)

21-11-86ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 00 மணியளவில் அராலித்துறை மினிவானில் யாழ்ப்பாணம் செல்லும் போது ஒரு வயோதிபரிடம் மக்கள் வங்கியில் சிறுபிள்ளைகட்கு மாதாந்தம் பணம் கட்டும் புத்தகம் வைத்திருக்குபடி கொடுத்தேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் இறங்கும் போது மறந்துவிட்டேன். தயவு செய்து புத்தகத்தைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்குப்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ந. விஸ்வநாதன். விவசாய இலாகா, [illegible] அல்லது 5A வட்டாரம், நயினாதீவு. (C 6078)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

பெரியகடை மரக்கறிச் சந்தை, நவீனசந்தைசயிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றின் 1987ம் ஆண்டுகுத்தகைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மநாகராட்சிமன்ற ஆணையாளரால் 04 12 86ம் திகதி நண்பகல் 12 00 மணிவரை நல்லூர் இந்துவ்டுதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்:

கேள்விகள் கேள்விப் பிணைப் பணமாக முறையே ரூ. 2000 மும், ரூ 250ம் கேள்விப்பத்திரக்கட்டணமாக ரூ 50ம் செலுத்துவதின்பேரில் 03-12-86 திகதி பிற்பகல் 3-00 மணி வரை மாநகராட்சிமன்றசிறும்பியடி அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

மேலதி விபரங்களை மாநகராட்சிமன்ற சிறும்பியடி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்

சீ வி கே சிவஞானம்,
மநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்
[A-3169]

## கல்வி

ரேடியோ, ரெலிவிசன் றிப்பயறிங் செய்முறையுடன் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்பம் புதிய பிரிவு 6-12-86 விபரங்கட்கு; Electronic Technical Centre Kaival i Sandilipay. [C 6077]

UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA

Applications will be received by me for the following posts from suitable candidates upto 31-12-1986.

1. Junior Assistant Librarian.
2. Assistant Lecturer in Siddha Medicine.
3. Temporary Assistant Lecturer in Biochemistry.
4. Temporary Demonstrator in Siddha Medicine.
5. Temporary Instructor in English.
6. Temporary Tutor in Geography.
7. Temporary Assistant Lecturer in History
8. Assistant Lecturer in English Literature.

Application should be made on the forms available from this office Those who wish to obtain the forms and other details by post should sent self addressed stamped envelope of 23X10 c m in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions

REGISTRAR,
University of Jaffna,
Sri Lanka
Thirunelvely,
Jaffna. [A-3170]

## வரவேற்பு

யாழ்ப்பாணம் திங்கள் 'பல்கலைக்கழக மாணவர்களுக்காக' என்றதலைப்பில்தமிழ் ஈழவிடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தினடிப்படையில் அதில் காணப்பட்ட உறுதிமொழிகளின் பேரில் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்த ஒப்புக்கொண்டமையையிட்டு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வரவேற்பதாக தெரிவித்துள்ளது.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் கி. பிரதீபன்

ஈஸ்வரா இல்லம் தொல்புரம் சுழிபுரத்தைச் சேர்ந்த நடுநாயகம் கிருஷ்ணகுமார் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வன் கி. பிரதீபன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (1-12-1986) தமது இல்லத்தில் [illegible] கொண்டாடுகின்றார். இவரை அம்மா-அப்பா, அம்மம்மா-பாட்டா, அப்பப்பா, சிறிய அப்பப்பாமார் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், அண்ணன்மார், உற்றார், உறவினர் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர். (C 5969)

## வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள்
## தோலகட்டி தயாரிப்புகளுக்கு கவனிக்க

முதலாம் திகதி டிசெம்பர் மாதம் முதல் —

கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளுக்கு
எமது மொத்த சில்லறை வியாபாரிகளாக

**ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்,**
பலாலி வீதி, திருநெல்வேலி

என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, நல்லூர் பகுதிகளுக்கு
மொத்த சில்லறை வியாபாரிகளாக

**சசி கோப்பி அன்ட் கூல் பார்,**
[சந்தை எதிரில்]
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்.

என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம்;

உங்கள் தேவைகளுக்கு அவர்களை நாடுங்கள்;

**ஜோ. எகிட்டன்**

செனித் மார்கட்டிங்.
19/3, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(A3167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனனில் நேற்று தொடர்ந்து 6-வதுநாளாக சண்டை; 30 பேர் பலி, பலர் காயம்

பெய்ரூட், நவ 30

லெபனனில் ஷியா அமல் மக்கள் படைக்கும் பாலஸ்தீனியர்களுக்கு மிடையே நேற்று தொடர்ந்து ஆறுவது நாளாக தீவிர சண்டை இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெய்ரூட்டில் பாலஸ்தீனிய அகதிமுகாம் களைச் சுற்றிய பகுதியிலும் தெற்கு நகரங்களிலும் நேற்று முழுவதும் சண்டைகள் நடை பெற்றன. பெருமளவு டாங்கித் தாக் குதல்களுடன் ஷியா மக்கள் படை சடீலா முகாமை [illegible] இரண்டு

[5ம் பக்கம் பார்க்க]

சட்டப்பேரவை தி. மு. க. உறுப்பினர்கள்

## பதவி நீக்கத் தீர்ப்பினை ரத்துச்செய்ய வேண்டும்

சென்னை, நவ 30

சட்டப்பேரவை தி. மு. க. உறுப்பினர்கள் எழுவரை பதவிநீக்கம் செய்து பேரவை சபாநாயகர் திரு பி. எச். பாண்டியன் அளித்த தீர்ப்பை ரத்துச்செய்ய வேண்டுமென்று நேற்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசிய பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்கள் தேர்தல் கமிசனைக் கேட்டுள்ளார்கள்.

ஜனதா, தமிழ்நாடு பார்வார்ட் புளக், தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக். திராவிடர்கழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் இக் கூட்டத்தில் பேசினார்கள்.

சபாநாயகரின் தீர்ப்பு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும் இதற்காக சபாநாயகர் மீது நடவடிக்கை எடுக்க வெண்டுமென்றும் இக் கட்சிகள் தமிழ்நாடு ஆளுனரைக் கேட்டுக்கொண்டார்கள்.

இக் கூட்டத்தில் பேசிய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் திரு மு. கருணாநிதி தேசிய மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண் மென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ் உட்பட அனைத்து மொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப்படுமென்று அறிவிக்க பிரதம மந்திரி முன் வந்தால் ஹிந்தி திணிப்பிற்கு எதிரான போராட்டத்தைக் கைவிட திராவிட முன்னேற்றக்கழகம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்

தனது கட்சி அரசியல் கட்சி சட்டத்தை ஒருபோதும் அவமதித்ததில்லை என்று கூறிய அவர் அரசியல் சட்டத்தின் 17வது பகுதியை எரிக்கும் தற்போதைய போராட்டம் ஒரு அடையாள எதிர்ப்பே என்றும் தெரிவித்தார்.

இத்தவேளை நேற்று செங்கல்பட்டு மாவட்டத்தில் ஹிந்தியை ஆட்சிமொழியாகக் குறிப்பிடும் காகித துண்டுகளை எரித்ததற்காக சட்டப் பேரவை மதுராந்தகம்

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

6வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அடுத்த வருடம் (1987-ம் ஆண்டு மலேசியாவில் கோலாலம்பூர் நகரில் மிகச் சிறப்பாக கொண்டாடப் படவிருப்பதாக அறியப்படுகின்றது.

இம் மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்று வருவதாகவும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு. இரா. நா. வீரப்பன் தெரிவித்துள்ளார்.


திருமண அழைப்பு

மணமகன்: சரவணபவன் (நிர்வாக செக்குரார் ஷப்ரு - உதயன் - சஞ்சீவி) ஈஸ்வரபாதம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன்

மணமகள்: யசோதை (நடேசபிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரி)

இடம் - தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில்
காலம் - 6.12.86 சனிக்கிழமை
முகூர்த்தம் - நண்பகல் 11 மணி முதல் 12-30 வரை

தங்கள் நல்வரவையும் வாழ்த்துக்களையும் விரும்பும்

திரு. செ நடேசபிள்ளை தம்பதியர்
60/5 அருளானந்தம் ஒழுங்கை
சங்குவேலி, மானிப்பாய்

திரு. இ. ஈஸ்வரபாதம் தம்பதியர்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

C 6099



# றொபின் சோப் பரிசுப் போட்டி

சேகரியுங்கள்! சேகரியுங்கள்! சேகரியுங்கள்!


றொபின் சோப்வகைகளின் மேலுறைகளைச் சேகரித்து கவர்ச்சியான பெறுமதி வாய்ந்த பரிசுகளை பெறுங்கள்.

பெனின்சுலா குறூப்பின் தரமான தயாரிப்பு!

கொழுப்புக் கலப்பற்ற சுத்தமான எண்ணையில் மேல்நாட்டு யந்திர முறைப்படி தயாரித்த றொபின் சோப்வகைகளைப் பாவியுங்கள்!

ரூபா 11/75

Retail Price:




சிக்கனத்திற்கும் தூய வெண்மைச் சலவைக்கும் றொபின் சோப் வகைகளை உபயோகியுங்கள்.

ஒருமுறை பாவித்தால் மீண்டும் நாடுவீர்.

தொழிலகம் AND காரியாலயம்
9, கண்டி வீதி,
நாவற்குழி.

பங்குபற்றும் முறை:

10 றொபின் பார்சோப் மேலுறைகளையோ அல்லது 20 றொபின் அரைபார் சோப் மேலுறைகளையோ அல்லது 50 றொபின் வெள்ளை சோப் மேலுறைகளையோ அல்லது 50 றொபின் நீல சோப் மேலுறைகளையோ சேகரித்து. அவற்றுடன் ஒரு 5'' X 2½'' வெள்ளை கடதாசியில் உங்கள் முழுப்பெயர், விலாசம் ஆகியவற்றையும் மறுபக்கத்தில் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றையும் எழுதி அனுப்பவும்.

பாவனையாளர் பரிசுகள்:

1ம் பரிசு - நேசனல் 2 in one Set
2ம் பரிசு - நேசனல் றேடியோ
3ம் பரிசு - சுவர்க்கடிகாரம்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

வியாபாரிகள் பரிசுகள்:

முதல் 3 பரிசுகளையும் பெறும் பாவனையாளர்கள் சவர்க்காரம் வாங்கிய கடைகளுக்கு

1ம் பரிசு - சுவர்கடிகாரம்
2ம் பரிசு - Air Pot Cooling
3ம் பரிசு - Thermos சுடுதண்ணீர் போத்தல்

போட்டி முடிவு திகதி
1986 டிசம்பர் 25-ம் திகதி

பரிசு இழுப்பு 1987 ஜனவரி 5ம் திகதி காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் நடைபெறும்.

அனுப்பவேண்டிய முகவரி:

த பெனின்சுலா குருப்
இல. 9, கண்டி வீதி, நாவற்குழி.

(பெனின்சுலா சவர்க்கார தொழிலகத்தின் ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.)

[A 3209]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒரு தொழிலுக்கு நகைச்சுவை மசகெண்ணெய் போன்றது. கோஷ்டிப் பிரிவுகளைத் தடுத்து நல்லெண்ணத்தை அது உருவாக்கும்.

—சி. ஜோர்டான்

# நமதுநோக்கு

## சர்வதேச 'தில்லுமுல்லு'

"நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால் இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார், அவர் கண்ணீர்க்கடலிலே விழமாட்டார்."

சினிமாவில் இவ்வாறு பாடி ஆடி நடித்த புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரனுக்கு ஆணையிடவும், அதனைச் செயல்படுத்தவும் வசதியுள்ள அரசியல் பதவியை தமிழ்நாட்டு மக்கள் மிக எளிதாக ஏற்படுத்திக் கொடுத்தார்கள் ஆனால் இன்னமும் தமிழ்நாட்டு ஏழைகளின் துயர் துடைக்கப்படவில்லை. அவர்கள் தினமும் கண்ணீர்க்கடலிலே மிதந்து கொண்டிருக்கிறார்கள்.

சினிமா வேறு வாழ்க்கை வேறு என்பதை அங்கு பாமரமக்கள் இன்று புரிந்து கொண்டு சமாளித்துவருகிறார்கள்

அமெரிக்காவில் நடிகர் றொனல்ட் றீகன் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட போது அவரை ஒருநடிகராக அவர்கள் அங்கே பார்க்கவில்லை. குடியரசுக் கட்சியின் ஒரு தலைவர், அதிபர் பதவியை வகிப்பதற்கும் அதன் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கும் ஏற்றவர், தோற்றப் பொலிவும் கவர்ச்சியும் உள்ளவர் என நம்பினார்கள்.

அமெரிக்காவின் நேர் எதிரியாகக் கருதப்பட்டுவந்த சீனாவுடன் மிக நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி ஐநா வில் சீனாவுக்கு எதிராகப் போடப்பட்டுவந்த முட்டுக்கட்டைகளை அகற்றி சர்வதேச அரங்கில் பெரும்புகழ் சம்பாதித்துக்கொண்ட நிக்ஸன் "வாட்டர்கேட்" ஒற்றுக்கேட்டல் ஊழல் விவகாரம் அம்பலமானவுடன் கைக்காசத்தில் தம் பதவியையேவிட்டு ஓட நேர்ந்தது

அது உள்நாட்டு விவகாரம்.

ஆனால் இன்று அதிபர் றீகன் சம்பந்தப்பட்டுள்ள விவகாரம் சர்வதேச மட்டத்தில் அமெரிக்கமக்களைத் தலைகுனிய வைத்துள்ளது.

சமீப காலத்தில் நிக்கரகுவா கடல் பிரதேசத்தில் கண்ணிவெடிகளைப்போட்டு வைத்தமைக்காக உலக நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட அமெரிக்கநிர்வாகம். அத்தீர்ப்பை உதாசினம் செய்தது.

நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதஉதவி மற்றும் பொருளுதவி அமெரிக்காவினால் வழங்கப்படலாகாதெனத் தடைவிதிக்கப்பட்டிருந்தும்கூட மிகநாசூக்காக அமெரிக்க மக்களுக்குக் 'டிமிக்கி'விட்டு அந்தக் கிளர்ச்சியாளர்களுக்கு பணம் கிடைக்க வழி செய்திருக்கிறார் றீகன்பிரபு.

அமெரிக்க மேடையில் மாத்திரமல்ல சர்வதேச மேடையிலும் கூட திறமாக நடிக்கமுடியுமென்று காட்ட முயன்று இப்பொழுது வேஷம் வெளிப்பட்டு நிற்கிறார் அவர்.

லெபனானில் ஈரானிய சார்பு கெரில்லாக்களிடம் சிக்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகள் சிலரை விடுவிப்பதற்காக- ஒரு காலத்தில் அமெரிக்கரால் 'பயங்ரவாதிகள்' என வர்ணிக்கப்பட்ட ஈரானியருக்குத் தாராளமாக ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆயுதமும் நேரடியாக இல்லாமல் இஸ்ரேலியருக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஆயுதங்களை அனுப்புவதுபோல் அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் ஈரானுக்கு அனுப்பி அதற்காகக் கிடைத்த பணம் சுவிஸ் வங்கியிலிடப்பட்டு அங்கிருந்து நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது

லெபனானில் அமெரிக்கரை பணயமாக்கியுள்ளவர்கள் ஈரானுக்கு ஆதரவான கெரில்லாக்கள் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் ஆகாது ஆயுதம் கொடுப்பனவு இஸ்ரேல்மூலம் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் ஆகாது. ஈரானுக்குக் கிடைக்கும் ஆயுதங்கள் ஈராக்குக்கு எதிராக மட்டும் பாவிக்கப்படுமென்பதில்லை லெபனானிலுள்ள ஈரான் சார்புக் கெரில்லாக்களுக்கும் போய்ச் சேரும். இவ்வாறு அமெரிக்காவின் இந்த ஆயுதங்கள் மத்திய கிழக்கிலும் அதைச்சுற்றிய பிரதேசத்திலுமே பயன்படுத்தப்பட்டு அங்கு எப்பொழுதுமே அமைதி திரும்பாமல் செய்துகொண்டிருக்கும்.

எங்கே எவர் எக்கேடு கெட்டாலென்ன தமது நலன்கள் பாதுகாக்கப்பட்டால் போதும் என்பதே றீகன் அரசின்கொள்கை.

இதேரீதியில்தான் ஏனைய பிரதேசங்களிலும் இந்தக் கொள்கை பிரயோகிக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்வது அவசியம்.

லெபனானிலுள்ள அமெரிக்கரையும் காப்பாற்ற வேண்டும் அதே சமயம் நிக்கரகுவாவில் அரசுக்கெதிரான கிளர்ச்சியாளருக்கும் உதவவேண்டும் அத்துடன் ஈராக்-ஈரான் யுத்தம் நீடிக்கவும் உதவியதாகஇருக்கும். இஸ்ரேல்-ஈரான் நட்பு விரிவடைவதால் அரபு உலகில் மேலும் நெருக்கடிகளை தோற்றுவிக்கலாம்.

இவ்வாறு ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தும் றீகனின் முயற்சி ஓரளவே பலித்துள்ளது. இடை நடுவில் விஷயம் வெளிப்பட்டுவிட்டதால் அமெரிக்க மக்கள் விழித்துக்கொண்டுள்ளார்கள் விசாரணைகள் நடைபெறுகின்றன. இந்த விசாரணைகள் ஈரானுக்கு ஆயுதம் அனுப்பிய விடயத்தோடு நின்று விடலாகாது சர்வதேச மட்டத்தில் எங்கெங்கே ஆயுதங்கள் அனுப்பப்பட்டுள்ளனவோ அவைபற்றியெல்லாம் அமெரிக்க காங்கிரஸ் சபை துருவித்துருவி ஆராய வேண்டும். அவ்வாறு செய்யப்படின் இன்னும் பல்வேறு தில்லுமுல்லுகள் அம்பலமாகலாம்.

---

கனடா வரும்

# அகதிகள் பிரச்னையில் புதிய அணுகுமுறை

**கனடாவிலிருந்து வேலாயுதர் விவேகானந்தன்**

அகதிகளுக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்குவதில் உலகிலேயே தலைசிறந்த நாடாக கனடா விளங்குகிறது.

தமது சொந்த நாட்டில் உள்நாட்டு யுத்தம் இனக்கலவரம். உள்ளூர் அரசியற் புரட்சி போன்ற காரணங்களினால் துன்புறுத்தல்களுக்குள்ளாகி சுதந்திரமாக வாழவும் தமது வாழ்க்கையை முன்னேற்றவும் தகுதியற்ற மக்களுக்கு புகலிடம் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை வளமாக்குவதில் கனடா அளப்பரிய சேவையைச் செய்து வருகிறது. அண்மையில் மேற்கு ஜேர்மனியிலிருந்து கனடா வந்த அகதிநிலை கோரிய 155 இலங்கைத் தமிழர்களுக்கு புகலிடம் வழங்கி ஆதரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மனிதாபிமான அடிப்படையில் மனித உயிர்களுக்கு ஆதரவு காட்டும் பண்பைப் பாராட்டி ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவர் திரு ஜீன் பியறி ஹொக் Jean Pierre Hocke - The United Nations High Commissioner for Refugees) அவர்கள் 1986ம் ஆண்டுக்குரிய நான்சென் பதக்கத்தை (Nansen Medal) கனடாவுக்கு வழங்கியது யாவரும் அறிந்ததே.

எதிர்காலத்தில் பெருமளவில் அகதிகள் கனடாவிற்குள் வருவதனைக் கட்டுப்படுத்துவது பற்றிச் சிந்தித்து வரும் அதேவேளை தற்போதுள்ள அகதிகள் பிரச்னையை விரைவாக தீர்ப்பதிலும் கனடா பல புதிய வழி முறைகளை பரிசீலனை செய்து வருகிறது இதுவரை கால நடைமுறையிலிருந்து வந்த நீண்டகால விளக்க (Hearing) முறைக்குப் பதிலாக குறுகிய காலத்தில் ஒரு சில மணி நேரங்களில் பேட்டிகாணும் (Interview) முறை மூலம் அகதி நிலை கோரிய ஒருவர் நிரந்தர குடியுரிமை பெற (Landed Immigrant) தகுதியுடையவரா? இல்லையா? என்பது பற்றி தீர்மானிக்கப்படும் வகையில் புதிய முறை விளங்குகிறது.

புதிய முறையின் கீழ் பின்வரும் அம்சங்கள் குடிவரவு உத்தியோகத்தரால் (Immigration Officer) பேட்டியின் போது பரிசீலனை செய்யப்படும்.

### பொருளாதார ரீதியான ஸ்தாபிதம்

ECONOMICAL WELL ESTABLISHED

அகதிநிலை கோரிய ஒருநபர் பொருளாதார ரீதியாக நன்கு ஸ்தாபிதமுடையவராகக் காணப்பட்டால் அவருக்கு நிரந்தர குடியுரிமை அந்தஸ்து வழங்கப்படும். இந்த அம்சத்தின் கீழ் அகதிநிலை கோர்பவர் அரச சேமநலன் (Welfare) பணத்தை எதிர்பாராது தொழில் செய்து வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களையும் செய்யலாம் ஆனால் செய்யும் தொழில்களையும் தொழில் நிலையங்களையும் பதவியுயர்ச்சியோ அல்லது சம்பளயுயர்ச்சியோ இன்றி அடிக்கடி மாற்றுதல் கூடாது. அது நிரந்தர குடியுரிமை பெறும் நிலையை பாதிக்கும் நிதி ரீதியாக குறிப்பிடத்தக்களவு பணம் வங்கியில் வைப்பு செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும் அத்தியாவசியத் தேவைகளுக்கு செலவு செய்த பணம், தமது குடும்பங்களுக்கு அனுப்பிய பணம் தொடர்பாக விசேட விதிவிலக்குண்டு. இவற்றுடன் ஆங்கிலம் அல்லது பிரான்சிய மொழியில் குறிப்பிடத்தக்க அறிவு இருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும். இவற்றை அகதிநிலை கோரிய ஒருவர் திருப்திப்படுத்துமிடத்து அவர் நிரந்தர குடியுரிமை பெறுவார்.

### பொருளாதார ஸ்தாபிதத்துக்கான உள்ளார்ந்த வளம்

(POTENTIAL TO BECOME WELL ESTABLISHED)

அகதி நிலை கோரிய ஒருவர் குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்தாபிதம் அடைவதற்கான உள்ளார்ந்த வளம் உடையவராக காணப்பட்டால் அவர் நிரந்தரகுடியுரிமைபெற தகுதியுடையவராவார் இந்தஅம்சத்தின் கீழ் குறிப்பிட்டநபர் தனதுசொந்த நாட்டில் இருந்தபோதுசெய்த தொழில், அதுதொடர்பான அனுபவம், கல்வித்தகைமை, ஆங்கிலம் அல்லது பிரான்சிய மொழியறிவு, தொழில்சார் திறமை, ஆளுமைத்திறன் என்பனபோன்ற விடயங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அகதி ஒருவர் இவ்விடயங்களை திருப்திப்படுத்துமிடத்து அவருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்படும்

### பொறுப்பேற்கக்கூடிய உறவினர் ஒருவரைக் கொண்டிருந்தல் Have a Relative to Sponsor

அகதிநிலை கோரிய ஒருவரை தத்தெடுக்கும் விருப்பமும் உள்ள உறவினர் ஒருவர் பொறுப்பேற்குமிடத்து அவரும் நிரந்தரகுடியுரிமை பெறுவார். பொறுப்பேற்பவரும் உறவினர் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவராகவும், கனடிய பிரஜையாகவோ (Canadian Citizen) அல்லது நிரந்தர குடியுரிமை பெற்றவராகவோ இருக்கவேண்டும் மேலும் அவர்முன்பு குடிவரவுதொடர்பான எந்தவொரு குற்றத்துக்கும் உட்பட்டவராக இருக்ககூடாது. இவற்றைவிட உறவுமுறை பற்றியும் இந்த அம்சத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது. பொறுப்பேற்பவருக்கு அகதிநிலை கோரியவர் கணவன் அல்லது மனைவி மகன் அல்லது மகள் பேரன் அல்லது பேத்தி ஆகிய ஏதாவதொரு உறவுமுறை சார்ந்தவராக இருக்க வேண்டும் மகன் அல்லது மகள் முறையானவராயின் அவர் இருபத்தொரு வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். மேலும் பதினெட்டு வயதுக்குட்பட்ட திருமணமாகாத அனாதை ஒருவரையே சகோதரன் அல்லது சகோதரி மாமன் அல்லது மாமி முறையானவர்கள் பொறுப்பேற்க

(5ம் பக்கம் பார்க்க)

---

# சிவ விஷ்ணு அம்சமான சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

**தி. பொன்னம்பலவாணர்**

திருமால் வழிபாடு இராம வழிபாடாகவும் கிருஷ்ண வழிபாடாகவும், நடைபெறுவது போல சாஸ்தாவென்றும் ஐயனார் என்றும் குறிப்பிடப்படும் ஹரிஹர புத்திர வழிபாடே ஐயப்பன் வழிபாடாகும்

சிவ அம்சமும் விஷ்ணு அம்சமும்சேர்ந்த ஐயனாரின வழிபாடு ஐயப்ப அவதாரத்தால் சிறப்புற்றிருக்கிறது

இந்தியாவில் கேரள மாநிலத்தில் சபரிமலையிலே ஐயப்ப சுவாமிகளின் கோவில் அமைந்திருக்கின்றது ஐயப்பனை வழிபடுபவர்கள் ஒரு மண்டலம் (40 நாள்) விரதமிருப்பதைத் தம் வருடக்கடமைகளுள் பிரதானமானதாகக் கொள்வர். இதேபோலத் தம் வாழ்வில் ஒருமுறையாவது ஐயப்பவிரதமிருந்து 40வது நாள் சபரிமலையில் நடைபெறும் மகரவிளக்குத்தரிசனம் செய்வதைப் பெரும் தெய்வீகப்பெரும் பேறாகக் கருதுவர். வருடந்தோறும் [illegible] செய்வதும் வாய்ப்புடைய ஐயப்ப அடியார்களின் பேறாக மதிக்கப்படுகின்றது.

40 நாட்கள் நியமமாக விரதமிருத்தல், விரதமிருப்பதற்கு ஏற்கனவே விரதமிருந்து சபரிமலை யாத்திரை செய்த ஒரு அடியாரை விரதமிருப்பதற்குக் குருவாகக்கொள்ளுதல் விரதகாலத்தில் பூரண பிரமச்சாரியத்தை அநுஷ்டித்தல், விரதகாலத்தில் விசேஷமாக உலகம்முழுவதையும் அதாவது தாம் காணும்-சந்திக்கும் எல்லாவற்றையும் ஐயப்ப சுவாமியின் அம்சமாக மதித்துப் போற்றுதல் என்பன ஐயப்ப விரதத்தில் காணப்படும் சிறப்பம்சங்களாகும்.

ஹரிஹரபுத்திரனான ஐயனார் மூலம் அறுகருமங்களைச் சாதிப்பது நோக்கமாகக் கொண்டே அவதாரம் புரிந்ததாகக் கூறுவர். அதர்மத்தை ஒழித்தல், கல்வியால் சீரழிக்கப்பட்ட சாஸ்திர [illegible] அமைத்தல், சாதி [illegible] காமக்குரோதங்களின்றி யாத்திரையை நிலைநிறுத்தல் என்பனவே ஐயப்ப சுவாமியின் அவதார நோக்கங்களாக இருந்தன. இந்தநோக்கங்கள் முதலிரண்டும் ஐயப்ப சுவாமி மணிகண்டன் என்னும் பெயருடன் வாழ்ந்த காலத்திலேயே நிறைவேற்றியதோடு யாத்திரை முறையையும் ஆரம்பித்து வைத்திருக்கிறார். ஐயப்ப சுவாமியைக் குறித்து விரதமிருப்பவர்களும் யாத்திரை செய்பவர்களும் தெய்வீகநலன்களையும் தெய்வீக அனுக்கிரகத்தால் உலகவாழ்வில் பல சிறப்புக்களையும் நன்கு அடைவதன் காரணமாக ஐயப்ப சுவாமியின் மூன்றாவது அவதார நோக்கம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

உலகெங்கும்பரந்துவளர்ந்து வரும் ஐயப்பசுவாமி வழிபாடும் விரதமும் யாத்திரையும் இந்த நாட்டிலும் வளர்ச்சியடைந்துவருகின்றது என்றே சொல்லக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் பிரச்சினையில்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

முடியும் எனவும் கூறப்படுள்ளது.

விசேடகாரணங்கள்:
Special Reasons

உள்நாட்டு யுத்தம், இனக்கலவரம், உள்ளூர் அரசியல் புரட்சி ஆகியவற்றினுல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகித் தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி அகதிநிலை கோரியவர்களுக்கு நிரந்தரகுடியுரிமை வழங்க இந்தவிசேட அம்சம் இடமளிக்கிறது தற்போதைய சூழ்நிலையில் இலங்கை, சீனு, ஆப்கானிஸ்தான், அல்பேனியா, கியூபா, கம்போடியா, ஈரான், வடகொரியா, செக்கோசிலாவாக்கியா, எல்சல்வடோர், கிழக்குஜெர்மனி, குவாட்டமாலா, லெபனுன், கம்பூச்சியா, லாஓஸ், ருமேனியா, சோவியத்ரஷ்யா, வியட்நாம் ஆகிய நாடுகள் இந்த அம்சத்தினுள் அடக்கப்பட்டுள்ளன இந்நாடுகளிலிருந்து வந்து அகதிநிலை கோரிபவர்கள் கனடாவிலிருந்து நாடு கடத்தப்படுவதில்லை இவர்கள் நிரந்தர குடியுரிமை பெறும் தகுதியுடையவர்களாவர்.

மேற்கூறிய நான்கு அம்சங்களின் அடிப்படையில் கனடா தனது நாட்டுக்கு வந்த அகதிகள் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுத்துவருகிறது இப்புதிய முறையின் கீழ் கிட்டத்தட்ட இருபத்தோராயிரம் அகதிகள் நிரந்தர குடியுரிமை பெறவுள்ளனர் கடந்த பத்து வருடங்களில் ஒரு லட்சத்து இருபத்தோராயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் கனடாவில் குடியேற்றம் செய்துள்ளது மேலும் இவ்வருடம் சர்வதேச மனிதாபிமான உதவியாக [International Humanitarian Aid] பதினெட்டு மில்லியன் கனடிய டொலர்களை அகதிகள் புனர்வாழ்வுக்காக பங்களிப்பு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 31-ம் நாள் அந்தியேட்டிக் கிரியை

அமரர்
சிவசுப்பிரமணியம் சோமசுந்தரம்
[பிரதம லிகிதர் கல்முனை கல்வி அலுவலகம்]

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற புகையிரதநிலைய அதிபர் சிவசுப்பிரமணியம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், அன்னலட்சுமியின் அன்புக் கணவனும் புஸ்பரதி, உமா, புஸ்பகாந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளனின் மாமனும், கௌதமியின் பேரனும், இராஜவதி செல்லையா ஒய்வுபெற்ற யாழ். வைத்தியசாலை டயஸ்ஸ் ஸ்ருவட்டஸ்) சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற நமசிவாயம், தியாகலிங்கம் (இலண்டன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய சோமசுந்தரத்தின் ஈமைக்கிரிகைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், 2-12-86 அன்று நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்ருர், உறவினர் நண்பர்கள், ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி;
அன்னலட்சுமி சோமசுந்தரம்,
பிள்ளைகள், மருமகன், பேர்த்தி.
குவாறி வீதி,
கல்முனை. (C 6105)

## லெபனுல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி முன்னேறி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 30 பேர் வரையில் இச் சண்டைகளின் போது இறந்துள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதுடன் பலகட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சண்டை நடைபெறும் இடங்களில் வதியும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

இதேவேளை இருபகுதியினரிடையேயும் சண்டைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் டமஸ்கஸில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

ஈரான் வெளியுறவு அமைச்சர் இருபகுதியினருக்கிடையேயான சண்டை நிறுத்தப் பேச்சுக்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகிருர்.

தனது முகாம்கள் மீண்டும் தாக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதம் அளிக்கப்படாததால் இப்போதைய யுத்தத்தை பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் நிராகரித்துள்ளது. (ஒ)

## புளியங்குளத்தில்--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களின் சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லை.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நேற்றுமாலை அனுமதிக்கப்பட்டுள்ளார் புளியங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி வயது 27 என்பவரே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது தோட்டத்தில் வேலைசெய்பவர்களுக்குச் சைக்கிளில் பாண் கொண்டு செல்கையில் அவரை இராணுவத்தினர் அழைத்துச் சுட்டதாகத் தெரிய வருகின்றது இவருக்குக் கையிலும், தோள் மூட்டிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. [ஔ]

சிலங்கள் தினமட்டும்
வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கள்ளாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)
அடுத்த வெளியீடு
யேசுநாதர்

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
Yul Brynner,
Steven Mcqueen
in
MAGNIFICENT SEVEN
[Attack And Action]


உஷா மினி
DAREDEVIL COMMANDOS
கொமாண்டோ படங்களிலே இதுவரை வெளிவராத மிக சிறந்த தாக்குதல் படம் தாக்குதல் படங்களிலே இது தனிரகம்.
[புதிய வெளியீடு]

# 'விஜி' விடுதலையாகும்வரை போராட்டம் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள் 'அன்பான மாணவர்கள்' என்ற தலைப்பில் வெளிவந்த தம்பிடப்படாத துண்டுப் பிரசுரத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு தெரிவித்துள்ளது.


இத்துண்டுப் பிரசுரம் சம்பந்தமான அணுகுமுறையைத் தாம் கண்டிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்

விஜிதரன் கடத்தலைக் கண்டித்து நடைபெற்று வந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் விடுதலை அமைப்புகள் தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதன் பேரில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த அடிப்படையில் இம் மாதம் 3ம் திகதிவரை வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கும் போராட்டமும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்தையடுத்து விஜிதரன் விடுதலை செய்யப்படும்வரை ஏதாவது ஒரு போராட்டம் நடைபெறுமென்றும் மாணவர் அமைப்புக்குழு தெரிவித்துள்ளது. [ஓ]



விஜிதரன் கடத்தலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த மாணவிகளான உ. ஔவை [விஞ்ஞான பீடம்] மு. விஜயகுமாரி [கலைப்பீடம்] ஆகியோர்.





யாழ். பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த மாணவர்களை இங்குள்ள படங்களில காணலாம். மேலே; எஸ் பிரசாத் [வெளியார்] த விமலேஸ்வரன் [வணிகபீடம்] கீழே: இ. குகதாசன் [வணிகபீடம்] ஜே எக்ஸ் செல்வநாயகம் [கலைபபீடம்]

## வெலிக்கடைச் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள்மீது விசாரணை நடைபெறுகிறது

பண்டத்தரிப்பு, ஞாயிறு பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச்சிறைச் சாலையில் பல வருடகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அவர்கள் நடாத்திய போராட்டத்தின்பயனுக தற்போது பத்திரிகைகள் வாசிக்க கொடுக்கப்படுவதாக வும், அவர்கள் அடைத்துவைக்கப்பட்ட இருட்டறைகளிலிருந்து பல மணிநேரம்வெளிப் பகுதியில் நிற்க திறந்துவிடப்படுவதாகவும் அங்கு சிறைவைக்கப்பட்டிருக்கும் தமது மைத்துனரை பார்வையிடச் சென்று திரும்பிய மாதகல் வாசி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டுவருடகாலமாக வெலிக்கடைச்சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமது மைத்துனர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகவும் ஏனைய இளைஞர்கள் சிலர் மீதும் நீதிமன்றவிசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஓ]

## ஸாஜாகிரிக்கெட் மே.இந்தியா வெற்றி

ஸாஜா, நவ 30

ஸாஜாவில் நடைபெற்று வரு நான்கு நாடுகளுக்கிடையிலான 45 ஓவர் ஸாஜா கிண்ண' கிரிகெட் போட்டியின் 2வது போட்டியில் மேற்கிந்திய அணி பாகிஸ்தானை 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற இவ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது

மே.இந்திய அணி 33 2 ஓவர்ளில் ஒருவிக்கெட் இழப்பற்கு 145 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தானை வெற்றி பெற்றது. இதில் மே இந்திய ஆரம்ப ஆட்டக்காரர் கோல்டன் கிறினிச் 74 ஓட்டங்களையும், டெஸ்மண்ட் ஹெயின்ஸ் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. (சி)

## ஆனையிறவு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிறவு தடைமுகாமில் அந்த பஸ்ஸை மறித்த படையினர் பிரயாணிகளிடம் அடையாள அட்டைகளைக் கேட்டதாகவும் அப்போது தன்னிடம் அடையாள அட்டை இல்லையென்று தெரிவிக்கவே, முகாமிற்குக் கூட்டிச் சென்று நான்கு ஐந்து இராணுவத்தினர் உடல் முழுவதும் பலமாகத் தாக்கியதாகவும் நேற்று அவர் தெரிவித்தார்.

சிலமணி நேரத்தின் பின்னர் தன்னை அவர்கள் வெளியில் கூட்டிவந்ததாகவும். அச்சமயம் தான் வந்த பஸ் சென்று விட்டதாகவும், தன்னை வேறு ஒரு தனியார் வானில் ஏற்றி விட்டதாகவும், தான் ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [இ]

## வேலைக்காரச்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...டிருந்தது. அதில்சிறுமியின் உள்உறுப்பில் நஞ்சு இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரேதபரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் முன்னர் சாட்சியமளித்தபோது, இரசாயன பரிசோதனை அறிக்கை வந்தபின் சிலவிடயங்கள் குறித்து பின்னரும் சாட்சியமளிக்க விரும்புவதாக தெரிவித்திருந்தார்

கடந்த வியாழக்கிழமை இம் மரணவிசாரணை நடைபெற்றபோது சட்டவைத்திய அதிகாரி சாட்சியமளித்தார். இதனைத் தொடர்ந்து கொலை எனத் தீர்ப்பளித்த நீதவான், தொடர்ந்து விசாரணைநடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## உருக்கமான வேண்டுகோள்

கைத்தொழிற்பேட்டையில் உள்ள எமது ஸ்தாபனங்களாகிய முருகன் இண்டஸ்ரீஸ் லிமிட்டெட்டிலும் றயேஸ் கிளாஸ் தொழிற்சாலையிலும் 25-11-86, 26-11-86 ஆகிய இரு தினங்களில் ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத நபர்களினால் இயந்திரங்கள், தளபாடங்கள், போத்தல்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இத்தொழிற்சாலைகளில் 200 க்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமை புரிந்துள்ளனர். சீரற்ற காலநிலை காரணமாக இயங்காமலிருந்த எமது தொழிற்சாலைகளை காலநிலை சீராகும்போது திரும்பவும் இயங்கவிருந்தோம். தயவுசெய்து மேற் கூறப்பட்ட பொருட்களை மீண்டும் ஒப்படைத்து தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
இயக்குநர்.

[A3172]



## முக்கிய அறிவித்தல்
### தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கம்
ஊர்காவற்றுறை பிரிவு

4-11-86 ல் நடைபெற்ற மேற்படி நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் யாழ். ஊர்காவற்றுறை (அராலித்துறை உள்ளடக்கம்) மினி பஸ் சேவை நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் வீதி அனுமதிப்பத்திரத்துடன் வருகின்ற பஸ்களும் சிவில் நிர்வாகம் சீரற்ற நிலையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மிகுந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இ. பரமானந்தன், தலைவர்.
பொ. இராசரெத்தினம், செயலாளர்.

(C 6097)



## சிற்றி மெடிக்கல்ஸ்
— யாழ்ப்பாணம் —

எமது ஸ்தாபனத்தின் மொத்த விற்பனை நிலையம் 1-12-86 முதல் தற்காலிகமாக 464, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. உங்கள் சகலதேவைகட்கும் எமது புதிய விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

## சிற்றிமெடிக்கல்ஸ்

464, பிரதான வீதி,
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24194

(C60/8)



1987-ம் ஆண்டுக்கு

## ஆனந்தா திருக்குறட் கலண்டர்

★ இம்முறை நல்ல வெள்ளை போஸ்டர் கடதாசியில் சிவப்பு மையினால் அழகுற அச்சிடப்பெற்றுள்ளது.
★ யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்மஸ்ரீ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி சகல குறிப்புகளும் அடங்கியது.
★ அரச- வங்கி- வர்த்தக விடுமுறைகளும், பெரியார் நினைவு தினங்களும் குறிக்கப்பெற்றுள்ளன.
★ ஒரு முதல்தர சிறப்புக்கலண்டரில் நீங்கள் எதிர்பார்க்கும் எல்லா அம்சங்களும் அடங்கியது.
★ தடித்தமட்டையில் ஒட்டிய அழகிய வண்ணப் படங்களுடன் விற்பனைக்குத் தயார்!
★ குறைந்த அளவே அச்சிடப்பட்டுள்ளதால் தொகையாக வேண்டுவோர் தயவுசெய்து உடனே தொடர்பு கொள்க:—

**ஆனந்தா புத்தகசாலை,**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 22348


## ஓராண்டு நினைவு அஞ்சலி



**பரராஜசிங்கம் விஜயரஞ்சன் (குட்டி)**

ஈழ மண்ணில்: 08-10-64
ஈழவர் மனங்களில் 12 - 12 - 85

வெண்பா

(1) ஆறுகக் கண்ணீர்
அழுதே வடிக்கின்றோம்
மாறாத துயரத்தின்
மத்தியிலே—வீராகேள்
ஈரோசின் ஈடில்லா
வெற்றிக் குழைத்துயர்ந்
தாய்
வாராத வீரசொர்க்கம்
வாழ்

விருத்தம்

(2) ஐந்தாறு பிள்ளைகளா
ஆக மூன்றே மூன்று
அண்ணாவோ டக்கவும்
அருமருகி நிருபாவும்
கணக்கில்லாத் தூரத்தே
கனடாவிற் போயிருக்க
எமக்கென்ன குறையிங்கே
நீ இருக்க என்றிருந்தோம்
ஓடியே நீ போயும்
ஒருவருடம் முடிந்ததப்பா
வாடியே நாமிருக்க
வைத்தனையே வையகத்தில்
குட்டி குட்டி என்றுன்னைக்
கூப்பிட்டேன் பல்காலும்
நடந்து முடிந்ததை
நல்லுலகில் நல்லதல்ல.

(3) எடுத்த கருமமதை
எள்ளளவும் பிசகாமல்
முடித்தாயென்
றுன்தோழர் கூறுஞ்சொல்
கேட்குங்கால்
உள்ளங் குமுறுதடா
உலகம் வெறுக்குதடா
என்செய்வோம் எங்குட்டி
எப்படி நாம்
மறந்திருப்போம்,

(4) ஒருவருட காலமதாய்
ஓயாமல் அழுகின்றோம்
அழுது வடிந்தகண்ணீர்
ஆறுகப் பெருகுதப்பா
உன்னைத் தெரிந்தவர்கள்
உன்புகழை உரைக்குங்கால்
அடிவயிறு எரியுதப்பா
ஆறவே முடியுதில்லை.

(5) இருபத்தோ
ராண்டினிலே எமைவிட்டு
நீ பிரிந்தால்
எப்படி நாம்
பொறுத்திருப்போம்
எம்வயிறு எரியுதடா
எத்திசையும் உன்புகழை
எவ்வெவருஞ்
சொலச்சொலவே
கவலை பெருகுதப்பா
கண்ணீராய்வடியுதங்கே.

(6) பொன்னுடு நீபோய்ப்
புகுந்தநாள் முதலாக
இந்நாட்டில் நமக்க
எம்மனசு இணங்குதில்லை
மன்னவே எங்குட்டி
மாற்றான் வலி அழித்து
எம்நாட்டை மீட்காமல்
எங்குற்றாய் சொல்மகனே.

உனைமறக்க முடியாத
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அத்தான், மருகி,
உற்றார், உறவினர்,
தோழர்கள்.

''குட்டி இல்லம்''
இருபாலை வீதி,
கோண்டாவில்.

(C 6082)

# புனிதமண்



இன்று எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் தமிழ் மாணவர்கள் படிக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கப்போனால் ''ஷெல'' விழும் சத்தம். வீட்டில் வந்து படிக்கத் தொடங்கினால் வீதிக்கு வீதி ஒலிபெருக்கிச் சத்தம்! நித்திரைக்குப் போனால் பெரும்தொகையாக நாரத்தில் பெருகிவிட்ட நாய்கள் ஊளையிடும் சத்தம்!

அரசாங்கம் மாணவர்களை ஒருவகையில் தரப்படுத்த, நம்மவர்கள் இன்னொருவகையில் உபத்திரவம் கொடுத்தால் கல்வி மலருமா? எமது சமுதாயம் சிந்தித்துச் செயலாற்றுதல் வேண்டும்.

— பாணபத்திரன்

## சட்டப்பேரவை

(3ம்பக்கத் தொடர்ச்சி)

தொகுதி உறுப்பினர் திரு. சி. எஸ். ஆறுமுகம், ஆலந்தூர் தொகுதி உறுப்பினர் திரு. எம். ஏபிரகாம உட்பட திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் சுமார் ஆயிரம்பேர் கைதுசெய்யப்பட்டனர். (ஓ)

## 6-வது மாத நினைவஞ்சலி



**செல்வி ரஜினி பாலசிங்கம்**

(சுண்டுகுளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27-05-1969
உதிர்வு: 31-05-1986

பதினாறு ஆண்டுகள்
வாழ்ந்தது
போதும் என்று நினைத்து
நீர் எம்மைவிட்டு
பிரிந்திரோ
பிரிந்த ஆறுவது
மாதத்தில்-நாம்
ஆற்றுத் துயரில்
வாடுகின்றோம் ரஜனி
தொப்புள் இறுகையிலே
தொடர்பும்
அறுந்திருந்தால்
கண நேரக் கலக்கத்தில்
கவலையை
மறந்திருப்போம்:
எங்கள் குடும்பத்தின்
ஒரு குலவிளக்காய்
பிறந்தாயே அன்புச்
செல்வமே
நீர் எங்கள் வீட்டில்
இல்லாமலிருந்து
பல ஒளி விளக்குகள்
இருந்தும்-நாம்
இருட்டில் கிடந்து
தவிக்கின்றோம் ரஜனி.
அமைதியின்
இருப்பிடமாய் உற்றார்
உறவினர் யாவரும்
போற்ற
நடந்த உத்தமியே
உன்மை மறக்க
முடியாமல் யாவரும்
கலங்குகின்றோம்:
உன் நினைவால் வாடும்:
அப்பா, அம்மா,
தம்பி ரஞ்சித், உற்றார்,
உறவினர்கள்.

திரு. கி. பாலசிங்கம்,
(உரிமையாளர்
குவைஸ் கிறீம் ஹவுஸ்),
71. 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
01-12-1986. (C 6092)

## அந்தியேட்டி அழைப்பு



**திரு.மு.பொன்னுத்துரை**

திரு: மு: பொன்னுத்துரை அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று 01-12-86 காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொ. புவனேஸ்வரி.
கலவத்தை,
காங்கேசன்துறை.

[C-6103]

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் N M C. மகேசன்**

ஆண்டவன் படைப்பு: 16-07-1924
ஆண்டவன் அழிப்பு: 04-12-1983
3-வது சிரார்த்த திதி: 01-12-1986

அப்பா! மரணம்தவிர்க்க முடியாதது என்பதை மனது புரிந்துகொள்கின்றது இருந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றனவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்.
'யமுனா' சுதுமலைமேற்கு,
மானிப்பாய். (C 5930)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம குருக்கள்

## தேவை

கொழும்பு, கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு உடனடியாக ஓர் பிரதம குருக்கள் தேவை. தகுந்த வேதனம் தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப் படும்.

விபரங்கட்கு பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி துர்க்கை அம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை என்னும் விலாசத்துடன் ஒரு வாரத்திற்குள் தொடர்புகொள்ளுமாறு பணிவுடன் வேண்டப்படுகிறார்கள்.

க. பாலசுப்பிரமணியம்.
தர்மகர்த்தா சபைச் செயலாளர்.
1-12 86

131, சியூ வீதி,
கொழும்பு-2
தொலைபேசி இல: 32225

(C6083)


## தொழிற்சாலை உருவாக்கித்தர கோரிக்கை

வவுனியா, ஞாயிறு

புதுக்குளம் கிராமத்திற்கு ஒரு கைத்தொழிற்சாலையினை உருவாக்கித்தரும்படி மேற்படி பகுதி கிராமோதயசபை தலைவர் திரு பி பத்மநாதன் வவுனியா ஒருங்கிணைந்த திட்டமிடல் பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாஸ்திரி கூழாங்குளம் பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இருளில் மூழ்கிக்கிடந்த இப்பகுதிக்கு தற்போது மின்விநியோகத்தினை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக திட்டமிடல் பகுதியினருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.


# இடமாற்றம்

பாதுகாப்புக் காரணமாக எமது ஸ்தாபனம் No.87, ஸ்ரான்லி வீதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். நீல, பன்னல், மடைச்சல கட்டைகளும் [Luvers] இதே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## நாதன் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ்

No 87, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

150 யார் ஆரியகுளம் சந்தியிலிருந்து அத்தியடிப் பக்கம். (C6089)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நவீனசந்தை மக்கள்வங்கி கிளை கட்டிடத் திருத்தவேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் திருத்த வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப்பிணைப் பணம் மீளளிக்கப்படக்கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்-ப் படமுடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | நவீனசந்தை மக்கள் வங்கி கிளை கட்டிட திருத்தவேலை | 1000/- | 150/- | 200,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்.
யாழ்ப்பாணம்.

(A 3161)



# செனித் வழங்கும் புதுமைப் பரிசு

வாசகர்களே!

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு

**வாசகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!**

உங்கள் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் நீங்கள் நேசிப்பவர்களுக்கு 'ஈழநாடு' மற்றும் உள்ளூர் பத்திரிகைகள் மூலம் இலவசமாகத் தெரிவியுங்கள்.

**நீங்கள் செய்யவேண்டியது பின்வருமாறு:-**

நத்தார், புதுவருட, பொங்கல், வாழ்த்துக்களை எந்தப் பத்திரிகையில் தெரிவிக்க வேண்டும் என்பதனையும். யாருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதனையும் தெளிவாகவும், அழகாகவும் கீழ்வரும் கூப்பனில் எழுதி 1986ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர், (நத்தார் வாழ்த்துக்களை) புதுவருட வாழ்த்துக்களை 1986ஆம் ஆண்டு மார்கழி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னரும், தைப்பொங்கல் வாழ்த்துக்களை 1987ஆம் ஆண்டு தை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்ப வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

**செனித் புதுமை வாழ்த்துக்கள்,**
செனித், 19/3 கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

ஆனால் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள் வாழ்த்துக்களை மூவருக்கு மட்டுமே தெரிவிக்கலாம் அத்துடன் மூன்று (3) தோலகட்டி நெல்லிரச லேபல்களை (நெல்லிரச போத்தலில் உள்ள லேபல) அத்துடன் பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனை அனுப்பினால் மட்டுமே வாழ்த்துக்கள் பிரசுரமாகும் ஒருவர் எத்தனை பேரையும் வாழ்த்தலாம் ஆனால் 3) மூன்று நெல்லிரச லேபல்களுக்கு மூவர் (பெயர் விலாசம்) மட்டுமே வாழ்த்துக்குரியவர். உதாரணத்திற்கு 15 (பதினைந்து) பேர்களை வாழ்த்த வேண்டுமாயின் 15 நெல்லிரச லேபல்களை கூப்பனுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஆகவே உங்கள் லேபல்களைச் சேகரித்து பெயர் முகவரியுடன் உடனே அனுப்புங்கள்.

## செனித் வாழ்த்துக் கூப்பன் (1)

உங்கள் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

வாழ்த்துக்குரியவரின் பெயர் முகவரி

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

வாழ்த்து இடம் பெறும் பத்திரிகையின் பெயர்:- ..............................
(ஈழநாடு / உதயன் / ஈழ முரசு)

..............................
கையொப்பம்

தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக.

அனுப்பவேண்டிய முகவரி:-
செனித், 19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**செனித் புதுமையின் உறைவிடம்!**

விளம்பர வடிவமைப்பு:: ஜோ. எகட்டன் செனித் ADS

(A-3166)



# LONDON ACCOUNTANCY COURSES

## at North Ceylon

# I. C. M. A.

**STAGE - I**

| | | |
|---|---|---|
| Economics | — | Mr. Thilakakumar |
| Quantitative Methods | — | Mr. R. Suresh |
| Business Law | — | Mr. Kanagamanickaran |
| Accounting | — | Mr. D. Gnanaseelan |

**STAGE - II**

| | | |
|---|---|---|
| Financial Accounting | — | Mr. Thilakakumar |
| Cost Accounting | — | Mr. R. Suresh |
| Information Technology Management | — | Mr. Kamalakumar |
| Management | — | Mr. R. Navarendran |

AND

# A. A. T. I. D. P. M.

Prelim
Inter
and
Finals

Part - I
and
Part - II

ஆரம்பம்: 6-12-86, 14-12-86.

உங்கள் பதிவுகட்கு:-

# North Ceylon Technical Institute,

14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 24355 [A-3214]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

1-12 86 திங்கட்கிழமை

# 'சுதந்திரதனிநாடே தமிழரை திருப்திப்படுத்தும்'

## பெங்களூர் மாநாட்டில் கருத்து

பெங்களூர், நவ 30 "இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜே. ஆர். அரசினர் இன்னமும் பேச்சுநடத்துவதில் நம்பிக்கையில்லை. சுதந்திர தனிநாடொன்றே தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தும். அது தவிர வேறொன்றும் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தாது"

இவ்வாறு பெங்களூரில் கடந்த 28ம் திகதி நடைபெற்ற ஒருநாள் தமிழர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பலரும் கருத்துத் தெரிவித்தனர். இம்மாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் சுயாட்சி திட்டமோ, வேறெதுவுமோ மிகத்தாமதமாகவே வந்துள்ளதென தெரிவித்ததுடன் தமிழ்மக்களை அழிவிலிருந்து காப்பாற்றவென இந்தியா இராணுவரீதியில் தலையிட வேண்டுமெனவும் கோரினர்.

'புரொடெக்' அமைப்பைச் சேர்ந்த திரு எஸ். இ. சந்திரஹாசன் உரையாற்றுகையில்: சர்வதேச மனித உரிமை பிரேரணைகளில் இந்தியாவும் கைச்சாத்திட்டிருப்பதால் இலங்கையில் நடைபெறும் தமிழர் கொலைகளைப் பற்றி சர்வதேச ரீதியில் குரல் எழுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு. சச்சிதானந்தன் உரையாற்றுகையில்; இலங்கை சம்பந்தமான இந்தியாகொண்டுள்ள நிலைப்பாடே தமிழர் மீதான ராணுவ நடவடிக்கைகளை ஜே ஆர். தொடர உதவுவதாயுள்ளது எனக்குற்றம் சாட்டினார். அத்துடன் இலங்கை அரசுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவை வற்புறுத்த போதியளவு மக்கள் கருத்து இந்தியாவிலில்லை எனவும் அவர் கூறினார்.

### ஈழவேந்தன் உரை

திரு ஈழவேந்தன் உரையாற்றுகையில், இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பான வாழ்க்கையிலேயே இந்தியாவின் பாதுகாப்பு தங்கியுள்ளதெனவும், தனியான தமிழர் தாயகம் ஒன்று வழங்கப்பட்டால், இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் கூட்டிணைவது பற்றி ஆராயலாம் எனவும் குறிப்பிட்டார்.

### சிவநாயகம் உரை

'சற்றர்டே றிவியு' முன்னாள் ஆசிரியர் திரு. எஸ். சிவநாயகம் உரையாற்றுகையில், தமிழ் இளைஞர் இலங்கையில் தாம் எவ்வளவுதான் துன்புறுத்தப்பட்டாலும் வன்முறை நாடக்கூடாது என்ற ஒரு கருத்து இந்தியாவில் நிலவி வருவதாகக் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டுக்குத்தலைமை வகித்த 'தொண்டர் நடவடிக்கைக்குழு' வின் தலைவர் திரு. என் கிருஷ்ணசுவாமி உரையாற்றுகையில், இலங்கைத் தமிழர் சம்பந்தமான உடன்படிக்கைகள் பகிரங்கமாகக் கைச்சாத்திடப்படவும் ரகசியமாகக் கிழித் தெறியப்படவுமே செய்து கொள்ளப்பட்டன எனக்கூறினார்.

[ஊ]

## 25 பேர் விடுதலை

வவனியா, ஞாயிறு முல்லை மாவட்டத்திலுள்ள முள்ளியவளை, குமுழமுனை ஆகிய இடங்களில் ஊரடங்குச் சட்டத்தின் போது ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட 25 பேர் நேற்று முன்தினம்வவுனியாஆயுதப்படை முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

## மருந்துகள் வந்தன

யாழ்ப்பாணம், திங்கள் மன நோயாளர்களுக்கான மருந்துகள் யாவும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்துள்ளன

அண்மைக்காலங்களில் மன நோயாளர்களுக்கான மருந்துகளுக்கு நிலவிய தட்டுப்பாடு காரணமாக நோயாளர் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். [வா]

## 'ஷெல்' அடியால் கிராமங்களில் பதற்றம்

ரோப்பாய், ஞாயிறு நேற்றுமுன்தினம் தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களின் பயங்கர சத்தத்தினால் அயற்கிராமங்களில் பலத்த பதற்றம் நிலவியது.

பதினைந்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் முகாமின் கிழக்கு, மேற்கு, தென்கிழக்குத் திசைகளை நோக்கி ஏவப்பட்டன.

வல்லை, வளலாய ஆகிய இடங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

## பிரவேசஅட்டைகள்

யாழ்ப்பாணம், திங்கள் எதிர்வரும் ஜி. சி. ஈ (சாதாரணதர) பரீட்சையில் தோற்றவுள்ள தனியார் பரீட்சார்த்திகளின் பிரவேச அட்டைகளில் சரியான விலாசங்கள். கொடுக்கப்படாதவர்களின் பிரவேச அட்டைகள் யாழ் கல்விக் கந்தோரில் வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை பிரவேச அட்டைகள் கிடைக்காத தனியார் பரீட்சார்த்திகள் தகுந்த அத்தாட்சி காட்டி இன்று முதல் யாழ். கல்விக் கந்தோரில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். [ஒள]

## நவீன சந்தையில் மண்மூடை அரண்கள்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். நகரிலுள்ள நவீன சந்தைக் கடைகளின் பாதுகாப்புக் கருதி மண்மூடை அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நவீனசந்தையின் ஒருபகுதிக் கடைகளின் விறாந்தைகளிலும் இந்த அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ)

## கேணியில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், திங்கள் அச்சுவேலியில் சங்கானை வீதியிலுள்ள கேணியில் சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இச்சிசுவின் சடலம் யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சிசுவின் மரண விசாரணையை நடாத்திய யாழ்பதில் நீதவான் க. சேசவன் பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், திங் யாழ்ப்பாணம் புனித யோண் பொஸ்கோ பாடசாலை பெற்றோர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பாடசாலை அதிபர் சிஸ். ஸ்ரனிஸ்லொஸ் மேரி தலைமையில் நடைபெறும். [சே]

## நேற்றும் 'ஷெல்' தாக்குதல்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்நகரில் நேற்றும் கோட்டையிலிருந்து 'ஷெல்' தாக்குதல் நடைபெற்றது. இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டபடியிருந்தன.

நேற்றுக் காலையில் இரு தடவைகள் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றதால் சில வீடுகள் சேதமடைந்தன. [இ]

## பிரயாணி சுடத்தப்பட்டார்

வவனியா, ஞாயிறு செட்டிகுளம் வாசி ஒருவர் வவனியா வந்து வான் ஒன்றில் பயணம் செய்தபோது பூவரசன் குளத்தில் வைத்து வானில் இருந்து இறக்கப்பட்டு இனந்தெரியாதவர்களினால் கடத்தி செல்லப்பட்டுள்ளார்.

## மேற்கிந்திய அணி வெற்றி

[புதுடில்லி]

ஷார்ஜாவில் நடைபெற்று வரும் சாம்பியன் விருது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டியில் இந்தியாவை மேற்கிந்தியத்தீவுகள் கோஷ்டி 33 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது.

ஸ்கோர் விபரம்: மேற்கிந்திய அணி 8 விக்கெட் நஷ்டத்துக்கு 198 றிச்சர்ட்ஸ் 62. இந்தியா 8 விக். நஷ்டத்துக்கு 165. [ஊ]

## மூதூர் பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவமுகாம் நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் 2ம் கொலனிக்கும் 3ம் கொலனிக்கும் இடையே ஜீப்வண்டி மீது தரைக்கண்ணிவெடித்தாக்குதல் நடாத்தினர். இதனால் ஜீப்வண்டி பலத்த சேதமானது. அதில் வந்த ராணுவத்தினருள் 4 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பின்பு ஏற்பட்ட நேரடி மோதலின் இறுதியில் ராணுவத்தினர் பின்வாங்கினர்.

இத்தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அண்மையில் உள்ள 2ம் கொலனியானது ஓர் தனிச் சிங்களக் குடியேற்றக் கிராமமாகும்.

## போராளிகளுக்கு வீரவணக்கம்

யாழ்ப்பாணம், திங் திரியாயில் தமிழீழ விடுதலைப்புலிகள் முகாமொன்றை கடந்த 28-ம் திகதி சுற்றிவளைத்து முற்றுகையிட்ட போது அம்முற்றுகையை முறியடிப்பதற்காக போராடுகையில் இரு போராளிகள் மரணமானார்கள். அவ்விருவருக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளது.

கப்டன் கருணா [முத்துக்குமாரு யுகராசா சாம்பல்தீவு] ஜெனகராஜ் ஆகியோரே மரணமானவர்கள்.

## சிதம்பரம் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள பதில் பற்றித் தமிழ்ப் போராளிகளுடன் கலந்தாலோசிக்கப்படும். (ஊ-ரா)

## பட்டுநகர்

[2 ம் பக்கத் தொடர்ச்சி]

ஞரைக் கைது செய்தனர்.

காரைதீவில் நேற்று இரண்டு பேர் படையினரால் கைது செய்யப்பட்டனர், இன்னொரு இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார், சதாசிவம் சாந்தகுமார் [26 வயது] என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கல்லடி முகத்துவாரப் பகுதியை நேற்றுக்காலை சுற்றிவளைத்த படையினர் 105 பேரைக் கைது செய்தனர். நேற்றுமாலை அவர்களில் மூவரைத்தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர். [ஊ]

## இலங்கையின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது ஜனாதிபதி ஜயவர்த்தன தமிழ்ப் போராளிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை தொடரும்வகையில் இந்திய இணை அமைச்சர்களின் இலங்கைக்கான அடுத்த விஜயத்தை தாம் வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனப்பிரச்னை தீர்வுகுறித்து இலங்கைஅரசு பேர்னாட் திலகரத்தினமூலம் இந்தியாவுக்கு சமர்ப்பித்த பிரேரணைகளுக்கும் மத்திய இணை அமைச்சர்களான திரு. பி. சிதம்பரம் திரு நட்வர் சிங் ஆகியோரின் கொழும்பு விஜயத்தின் போது முன்வைத்த பிரேரணைகளுக்கும் வேறுபாடு இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. [ரா]

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் சண்முகநாதன்

திருமதி அன்னபூரணம் சண்முகநாதன் அவர்கள் 29 - 11 - 86 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சண்முகநாதன் [உதவி அத்தியட்சகர் சிறைச்சாலைத் தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்) அவரின் அன்பு மனைவியும் வசந்தநாதன் [உத்தியோகத்தர் - வர்த்தக வங்கி யாழ் பாணம்), மகேந்திரநாதன் [விமான தொழில் நுட்பவியலாளர் சீனக்குடா], சாந்தநாதன் [உதவி பொறியலாளர் அமரன் குறூப் லிமிட்டெட் கொத்மலை], திருமதி ரவீந்திரா ரஞ்சிற்குமார் [U. K] ரமாவதி [லிகிதர் யாழ் பல்கலைக் கழகம்] நிமலநாதன் (பொறியியல் பீடம் பேராதனை] ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சத்தியதேவி வசந்தநாதன், திருமதி கருணா ஆனந்தி சாந்தநாதன் ரஞ்சிற்குமார் நாகலிங்கம் (U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும் டெரிஷன், மிதிலதர்ஷா ஆகியோரின் அன்புப பேத்தியும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் 1 - 12 - 86 திங்கட்கிழமை இன்று) பி. ப 3-00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும்

தகவல். S. வசந்தநாதன்
"சசி மங்களம்"
ஸ்ரேசன் ரோட் கொக்குவில்.

[C 6108]

### S செபஸ்ரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை (பொன்னுத்தம்பி)

S. செபஸ்ரியாம்பிள்ளை சுவாம்பிள்ளை 29 - 11 - 86 அன்று காலமானார். இவர் 28-11-86ல் காலஞ்சென்ற லில்லி அக்கினேஸ்சின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொஸ்கோ, நீற்று, டலியற் டென்சில்துரை, ஜெயபாலன் [டவி] ஆகியோரின் அன்புத் தந்தையும், லூய்ஸ், இந்திரன், விமலாதுரை, சாலற்பபி ஆகியோரின் மாமனாரும், பேப்பரிசநாயகம் [வட்டக்கச்சி], அலோசியஸ், மேரி யோசேப், கெலன் பிரான்சிஸ் [X R] வேப்ஸ் [மிருசுவில்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம், நாரந்தனை தெற்கு, "பொன் மகால்" இல்லத்திலிருந்து அர்ச் பேதுரு பாவிலு சேபக்கோவிலுக்கு [01-12 86] திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நீற்றுலூயிஸ்

(C 6111)

### திருமதி செல்லம்மா செல்லையா

மாவிட்டபுரம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லம்மா செல்லையா காலமானார். இவர் செல்லையாவின் அன்பு மனைவியும்,நவரட்ணம் (T.A நீர்ப்பாசன இலாகா. பாவற்குளம்] கந்தசாமி (நெளுக்குளம்],சண்முகநாதன் (T A. நீர்ப்பாசன இலாகா வவனியா], ரட்ணதேவி விஜயரட்ணம் (T O நெடுங்கேணி] Dr விமலாதேவி யாழ்ப்பாண அரசாங்க வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனாட்சிபாள், திருமதி கந்தசாமி, சாந்தகௌரி, மதியாபரணம் (A. O. பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம் வவனியா) சத்தியபாமா [பாமஸிஸ்ற், பண்ணை ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் [1 - 12 - 86] இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் தகனக் கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: C. சண்முகநாதன், K. K. ...
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

C-6112

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number ... P O Box 49. Telegram. Eelanadu Telephone: 22389—24125

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org